[1975 மார்ச் 12

Coral reef in Periathalai village

* 295 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether coral reef in Periathalai village in Tirunelveli district has been removed so as to facilitate easy movement of fishermen; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பவழப் பாறைகளை அகற்றி நீர்வழிப் போக்குவரத்துக்கான கால்வாயை அமைக்கும் பொருட்டு திருநெல்வேலி மாவட்டம், பெரியதாளை கிராமத்தில் தொடக்க ஆய்வுப் பணியைப் பொதுப்பணித்துறை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்

காவல்துறை தலைமை அதிகாரியின் அலுவலகத்தில் புதிய கொடி பறப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. சோ. அழகர்சாமி அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும்— " Serious situation arising out of a new Flag with State Symbol being flown in I.G.'s Office from 11th March 1975 and the likelihood of such flags coming up in the various Government institutions. " என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தக்கது என்பது பற்றி விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சபாநாயகர் அவர்களே, நேற்று இந்தப் பிரச்சினையைப் பற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எழுப்பியபோது ஒருவிதமான பதிலை முதலமைச்சர்